1992

DR

27-3-92

ஸ்ரீ. வைத்திய அட்டவணை.

பார்த்து திருத்தப்பட்டது

To be verified

806. வைத்திய அட்டவணை

எண்	:	806
பெயர்	:	வைத்திய அட்டவணை
அளவு	:	32.5 x 3
வரி	:	7
எண்ணிக்கை	:	(56 - 169)

சுவடி நன்றாக உள்ளது.

எடுத்த தேதி	:	2.3.92
முடித்த தேதி	:	27.3.92
மொத்தபக்கங்கள்	:	180
படி எடுத்தவர்	:	த. லைட்சுமி.

806. வைத்திய அட்டவணை

806. வைத்திய அட்டவணை

நூ.அ. ஊசாமல் சோதிதனைக் கூர்ந்து பார்க்க
குறிப்பான கருமான மொன்று கேளு
பேசதாத கருமானமம் நன்றாய் சொல்வேன்
பெருகிநின்ற சிவசத்திப் பூசை யாலே
கேசாதி பாதமுதல் நன்றாய் பார்த்து
கெணிதமுள்ள அருவமதில் சோதி காண
நீசாதிப் பேதமதாய் நினையா மல்தான
நிலையறிந்து மகாரமதை பூசை பண்ணே
349

பூசையென்ற தனையறிந்து மகார மான
அத்தரும் நாமத்தை யார்தான் காண்பார்
ஆசையுடன் புலத்தியனே சொல்லக் கேளு
யருள்பெருகும் நாதமென்று குறத மென்று
ஓசையுள்ள மணிநாத கெவ்ளை யென்றும்
ஓம்நவ நிவயமென்ற பான மென்றும்
வாசமுள்ள கருமான புப்பூ மென்றும்
மகத்தான நன்மையென்றுஞ் செந்தீ தானே
350

தானான மாதாந்தம் உண்மை யென்று
ஆ. தன்மையுள்ள பூரணமா நயால மென்றும்
ஊனான ஆணிறைந்த உருதி யென்றும்
உத்தமனே யான்னிவகு பெருஞ் டாகுந்
கோனான அகாரமென்ற ~~சென்னீர்~~ செநநீ தன்னை
குணமறிந்து மனதறிந்து குருவை நோக்கித்
தேனான அமுர்தரச பானங் கொண்டார்
திரையான சூத்திரையுந் திறக்கும் பாரே
351

பாரப்பா திரைமூன்றுங் கண்டு போகும்
பதிவான சோதியிலே ஒளிதான் காணும்
நேரப்பா நினைவால்நின்ற சோதி தன்னால்
நிசமாகத் தன்னொளி னைவக்கண்டா யானால்
ஆரப்பா புனக்கிடு சொல்லப் போகேன்
அரகார சைககோதி யான தேகஞ்
காரப்பா தன்னகத்தை தானே காத்துக்
கருணைவளர் புருவமாதக் காரு காரே
352

காரடா கருணையாளன் சிகார மான
கருணைவளர் பிரணத்தை யார்தான் காண்பார்
நேரடா நிலையறிந்து குருவை காத்தல்
நிசமான பூரணத்தின் நிலைசொல் வார்கள்
பாரடா சொல்மொழியான் பயனைப் பெற்றுப்
பதிவான ஆயாரத்தை மலருக் கில்லே
57.ஆ. பாரடா பளர்துமதி ஒன்றாய் நின்றாற்ச
சச்சிதானந்த பூரணமு மாச்சே
353

பூரணமாய் நின்றபரி பூரணத்தை யமைந்தா
போத மயமான பூரணமே யென்று
நிறையுஞ் செஞ்சடையோன் பாதம் போற்றி
நித்தியமும் பூரணத்தில் நிசமாய் நின்றாள்
போணைந்த ஆதார மாறா தாரம்
பேரண்டஞ் சித்தண்டம் ரெண்டுந் தானாய்
ஆரணைந்தாள் அலத்தியனே யுனக்காய்ச் சொன்னேன்
ஆயாரமாஞ் காவியத்தை யெடுத்துப் பாரே
354

பார்க்கையிலே அகத்தியுவன் நன்றாய்ப் பார்த்தால்
பஞ்சகண தேசதைகள்ப் பதிவாய்த் தோறும்
யெற்றையுடன் சகல்திரமா மலருங் குள்ளே
யிருக்குமடா மதியமுற்றந் தயவு போலே
சேர்க்கை யுடனோர் சூலம் பார்த்து
சிதம்பரத்தி னெல்லையாலே சேர்ந்து கொண்டு
மார்க்கமுடன் பூரணமா மமுதந்தான் கொண்டாள்
மகத்தான உடலுயிருஞ் சித்தி யாமே
355

சித்தியுடன் தானருந்து தீபம் பார்க்க
திறமான அகாரமதின் செயலுஞ் சொன்னேன்
சுத்தியுள்ள அகாரமதின் பெருமை சொன்னேன்
ஆ. சிப்பொருளாய் நின்றதொரு மகாரஞ் சொன்னேன்
பத்தியுடன் பூரணமாய்ச் சிகாரஞ் சொன்னேன்
பதிவாக சிதம்பரத்தின் தீட்சை பார்க்க
சித்தமுடன் நால்ப்பதுடம் பெத்துக் கொண்டு
குளிர்ந்துநின்ற திரையத்தி சோதி பாரே
356

சுயசோதி தியானது கருமானம் ஆதியுப்பு

சோதிமய மாவதற்கு மைந்தா மைந்தா
சுயசோதி யானகரு மானஞ் சேரு
ஆதியெரு வானதொரு ஐந்து சூத
மடங்கிநின்ற சோதியடா ஆதி யுப்பு
நீதியுட னுப்பறிந்து உப்பை வாங்கி
நிமகனே நவுருபோலே தாக்கி மைந்தா
நீதியதோர் காரமதில் தீட்சை தானு
நிறுதியுட நாலெட்டு புகந்து செய்யே 356

செய்யவே தீட்சையினால் கருமந் தங்கள்
செம்மையுடன் தான்கண்டு திரமாய் நிற்கும்
பையவே அகாரமுடன் மகாரஞ் கூட்டிப்
பாலகனே அதுக்கு அரா நவாயைச் சேர்த்து
நய்யவே தானிசைந்து நாதத்து திட்டு
நாதாந்தப் பூரணமே யென்று போற்றி
தீய்யவே சாமத்தனில் வைத்து மைந்தா
சுகமாக மண்டலஞ்சென் றெடுத்துப் பாரே 357

யெடுத்ததை பார்க்கையிலே ஆதித்ய மென்று
ஜீ.அ. யான் அறி. தேன் கற்பூர வாசம் வீசும்
நடுத்திர மாய்நின்ற நிறுவதி யாலே
நயனையொளி பார்வையாலே சபுனை மேவுத
தொடுத்தமன துறுவயினாள் சமைந்தா மைந்தா
கொதித்திரு வானகுரு கற்பஞ் கொண்டால்
அடுத்ததொரு ஆதார மாறா தார
யாதிசிவ சோதிமய மாகுந் தானே 358

தானேதான் திரையானுங் கண்டு நல்ல
சச்சிதானந்த மெய்மாகுந் ~~தன்~~ தேவ்
கோனேதான் தானவனால் யெங்கு தானாய்
குருவாகி யெங்குஞ் சிவயோக மாவாய்
ஆனேதான் தானாகி நின்ற தானே
ஆருருவா நின்றதடா ஆங்கா ரந்தான்
தேனேதான் யண்டமதில் அருவா பாயுந்
சிவசிவா அந்தமுற்றுஞ் நினைவு கொள்ளே
359

கொள்ளமனம் கொண்டுறுதி கொண்டா யானால்
குருவாகி நின்றதிரு வாசி தானும்
நல்லுறவா யண்டமதில் சென்று புக்கி
நாதாந்த சிலம்பொலிட நடனங் காணுஞ்
சொல்லுகிற மந்திரங்க ளெல்லாஞ் சுற்றி
சுருபனை சோதியாலே துலங்குந் தானேதான்
வல்லயமாய்த் தன்னுள்ளாந் தானே கண்டு
மகத்தான அருவமதில் மனதை நாட்டே
360

ஆ. நாட்டமுடன் நயனவாளி தன்பம் பார்க்க
நாதாந்த பஞ்சகனை கற்பஞ் சொன்னேன்
தேட்டமுடன் தானறிந்து மனது உர்ந்து
திருவான ஆரணத்தில் திறமாய் நின்று
கூட்டமன்றி தானவனாய்த் தானே நின்று
குருவான அஞ்சகற்பங் கொண்டு தேர்ந்தால்
வாட்டமில்லா மனதாக வாளவா யப்பா
வளமான கற்பமதுக் குறுதி கேளே
361

உறுதியுள்ள கற்பமொன்று சொல்லக் கேளு
உத்தமனே சுத்தமுள்ள மதிதா னொன்று
கருதியதோர் .. திப்பிலி .. மூல மொன்று
கன்னிமறு நான்மணியான சந்தி யொன்று
பருதிமதி சுடர்மூன்றாய் நின்ற மூலம்
பாலகனே யொன்று .. சிவ .. மாய்ச் சேர்த்து
சுருதியுடன் கல்வமதில் பொடித்து மைந்தா
சுத்தசலந் தன்னாலே அரைப்பாய்த் தானே
362

தானான .. உ .. குந்து நன்றாயரைத் துருட்டி
தன்மையுடன் நிழல்தனி லேகாய வைத்து
ஊனேதான் போகாமல் நன்றாய்க் காய்ந்தால்
59.அ. கானேதீர்ந்த மண்சீலை நன்றாய்ச் செய்து
கோனேதான் விளாயகா - யோற்றி - போற்றிக்
குறையறிந்து அடம்போட்டு யெடுத்துப் பார்த்தால்
நானேதான் சொல்லுகிறேன் மைந்தா கேளு
நன்றாக நிறைந்து பற்ப மாச்சே
363

ஆச்சப்பா பற்பமதை யதனம் பண்ணி
அந்தரங்க .. அமுரி .. எல்லாம் .. நோக்கி
பேச்சப்பா பேசாத மவுன மாகி
செருகிநின்ற கற்பமதை கொள்ளும் போது
பாச்சப்பா பணவிடைதான் பற்பந் தன்னை
பத்தியுடன் கொண்டதினால் பரிதாக தேகம்
நீச்சப்பா வாதயிது அகலா தையா
சுத்தியுடன் சந்திலை சூரசை பண்ணே
364

பண்ணப்பா யண்ணமொடு கற்பஞ் சேரு
பதிவான கும்பருகல் தன்னோடொக்க
உண்ணப்பா கம்பமையென்று அப்போ போக்க
உறுதியுள்ள தேனமது அரைதான் கட்டி
நண்ணப்பா கற்பூரஞ் காரஞ் கட்டி
நல்லதிலந் தனையரைத்து அட்டு பண்ணி
சொன்னப்பா ரஜதனிலே காயப் போட்டு
சுந்தரமே மண்டிலை வறுவாய் செய்யே 365

செய்யப்பா மண்டிலை வறுவாய் செய்து
செம்மையுடன் காய்ந்தமன்பு திருவை நோக்கி
ஆ வையப்பா புடந்தனிலே நிதான மாக
மைந்தனே புடமாறி யெடுத்துப் பாரு
மெய்யப்பா சொல்லுகிறேன் வைந்து நல்ல
வேதமுள்ள சுண்ணமதா யிருக்கும் பாரு
மையப்பா சுண்ணமதை யெடுத்துக் கொண்டு
பதனமதாய்ப் பூங்கானில் வைத்துக் காரே 366

காரப்பா சுண்ணமோடு பற்பம் ரெண்டும்
கைகண்டதாய் கருவறிந்து கருவாய்ச் செய்து
நேரப்பா சுபதிகுணையால் மனதை வைத்து
நேமமுடன் சத்திசிவ பூசை செய்வாய்
பாரப்பா உதயமதால் அண்ணதி கொண்டு
பதிவான மாலையிலே பற்பங் கொண்டு
சேரப்பா பணவிடையாய்க் கொண்டா யானால்
சிவசிவா தேகமது திறக்குந் தானே 367

திறக்குமடா வாசியது மூலத் துள்ளே
சிவஞான குலஅனல் மேலே சாடி
உறக்கமென்ற குத்தானை யகன்று போகு
சுருதியுடன் புருவமதில் தீபவ் காணும்
பறக்குமடா நரைதிரைகள் காலனேது
பாலகனே பதினாறு மாராயம் போலே
சிறக்குமடா தேகமது - சாந்தி! . ஜெயந்
திருவருளாய் நின்றஅகத்தி ரந்தான் பாரே
368

ம.அ.திறமான அஸ்தியடா திருவா சம்பு
திருவான உப்பதுவை யார்தான் காண்பார்
உரமான கேசரியாள் தவத்தால் மைந்தா
உண்டாகு பற்பமடா சுண்ணம் ரெண்டும்
வரமான சற்குருவின் கடாட்சந் தானே
மார்க்கமுடன் சிறையாய்ச் செய்து கொண்டு
பரமான புருவமதில் மலர்க்கண் சாத்தி
பாலகனே சத்திவை பூசை பண்ணே
369

வைப்பலம்

பூசையென்றி தவறாத புத்தி யொன்று
புண்ணியனே சொல்லுகிறேன் வைப்பலப் போக்கு
வாசமுள்ள சத்தியடா காசில் மண்ணு
மார்க்கமுடன் கொண்டுவந்து பாண்டத் திட்டு
நேசமுள்ள அண்டமடா கருவா டொக்க
நேசமுட னுடைத்து மண்ணும் ஒன்னும்
பாசமுடன் ஒன்றாக்கி ரசமாய்ச் சேர்த்துப்
பாலகனே செய்னீரை மூட்டுக் கிண்டே
370

ஹடமெக்க கிண்டையாலே கைந்தி தானும்
மேன்மைபெற யெட்டெரண்டு மாதநாய்க் கட்டி
திட்டமுடன் நன்றாகப் பாசைந்து மைந்தா
தீர்க்கமுடன் ரசஹதனாலே உலர்த்திக் கொண்டு
சட்டமுடன் பாணைதனி லாட்டுக் கொண்டு
ஆ. திண்மையுடன் குளித்தயாலந் தானே வாங்கி
இட்டமுடன் பாஷ்காணற் பதனம் பண்ணி
யின்பாச சஞ்சிவா யென்று போற்றே
371

போற்றுவது ஆதாரந் தன்னை மைந்தா
அத்தியுடன் வாசியானாலப் அருவ நேதி
ஆற்றுமந்துக் குயாரனக் குருவைப் போற்றி
ஆதியந்த மனவான அரசைக் கண்டு
பாத்துமனக் கண்ணாலே அருவத் துச்சி
பரமான பரமபந்த தெல்லை தன்னல்
காத்துமனக் கனிவாலே தன்னைப் பார்த்துக்
கனிவான பூரணத்தை கருவாய் வாங்கே
372

பூரணமெழுகு

கருவான கருவறிந்துக் குருவைப் போற்றி
கமலாசப் பூரணத்தில் தயலஞ் சேர்த்துக்
குருவான அமுர்த பூரணமே யென்று
தூபமாயரு கைகுவித்துப் பதனம் பண்ணி
உருவான பூரணத்தில் பணமடைதான் கொண்டு
உத்தமனே அருவமதி யுகந்து நின்று
திருவான கற்பூர தீபம் பார்த்த
தேகாமன்ற ஆகாரந் திறக்கும் பாரே
373

பாரப்பா திரைமறைந்து திரைத்தைக் கொள்ளார்
பலருசியால் மனதுகந்து பருதி தேய்ந்து
நீரப்பா தான்பெருகிச் சடத்தைப் போக்கும்
61.அ னேஅட்டுரே துஅட்டனாநீ நினைக்க வேண்டாம்
காரப்பா கருணையாதி மனக்கண் ணாலே
கற்பூர தீபமதைக் கனவாய் பார்த்து
சேரப்பா உன்னொளியில் தன்னொளி வைத்தே
சூற்றுமகை நின்றதினால் சிவயோக மாமே
374

ஆமப்பா சிவயோக மாதி யாதி
அப்பனே யாதியந்த மறிந்து கொண்டு
காமப்பால் காலப்பால் கொண்டு தெளிந்தால்
காலனென்ற அவமறுத்து காண நோடு
தாமப்பா சகலகலை யறிவாய் நின்று
சிங்கையுள்ள தெளிகையாலே ஸ்தானம் பண்ணி
ஓமப்பா வென்றமறை அந்தி னாலே
உள்ளமதில் நலமுறவா புகந்த காரே
375

புகந்துமகைப் பார்க்கைாது வாசி வாசி
ஆகுவே னேகாது அரு.வ.—மத்தி
அகந்தெளிந்து அருவண்டு அச்சி மீதில்
ஆனந்த மதியமர்ந்த மங்கே யுண்டு
பகுந்தறிந்து பகுத்தறிவா லுருத்தல் கொண்டு
பதிவாக இந்திரன் பதியிற் சென்று
சுகந்தெளிந்த அக்கினியில் நின்று தெளிந்தால்
சிடமென்ற யுகின்கண்டு முத்தி யாமே
376

முப்பூவிபரம்

ஆ. சித்தியுள்ள புலத்தியனே யோக ஞானே
சேர்க்குமுட யுண்மையாறு கருவைக் கேளு
பத்தியுள்ள முப்பூவாகுஞ் சுன்னத் தோடை
பாலகனே நவசார மொன்று கூட்டி
சித்தியுள்ள நாகசம் பத்துக் கொண்டு
சேர்த்துமகைத் தான்பொடித்துப் பதன மாகப்
பத்தியுடன் மூஷ்கானில் வைத்து மைந்தா
பூரணமாஞ் சந்திரன்தன் குகைதனில் வையே
377

வையப்பா சந்திரன்தன் குகைதனில் வைக்க
மகத்தான மதியகுர்தஞ் செலிகை யூறும்
மெய்யப்பா அந்தரச தன்னை வாங்கி
மேன்மையாற மெருகெனிப் பதனம் பண்ணி
செய்யப்பா யாந்நீர் செய்வீர் மைந்தா
செம்மையுடன் சரக்குகளைத் தீர்க்கும் பாரும்
பொய்யப்பா போகாது மெய்தான் பாரு
பூரணத்தின் செய்வினான் பதுமை தானே
378

தானான நாதவந்து தன்னால் மைந்தா
தணிந்துநின்ற தெளிகையடா யார்தான் கண்பார்
தேனான நாதமது முப்பூ வாச்சு
தெளிந்துநின்ற நவச்சாரம் வாந்து வச்சு
ஆனான நாதவாந்து ஒன்றாய் கூட்டு
உ.அ. உருகிநின்ற திடமதுதான் அந்த மையா
கோனான உதகமென்ற தியாந் தன்னை
குருவருளா லறிந்தமனக் குணத்தைப் பாரே
579

குணமான செய்வீரால் மைந்தா கேளு
குருவான திருஅருளைக் காண லாகும்
யிணமாகச் சத்திசிவ மறிந்து கேட்க
யென்னசொல்வேன் கட்டுமுனை திட்ட மாக
கனமானக் கட்டுமுனை திட்டம் பார்த்தால்
கண்ணடங்கா ஊன்னொளிதான் ஜொலிப்பாய் காணு
மனமான ஊனரச சூதை யாலே
மந்திரமாம் காயத்ரை மகிழ்ந்து பாரே
380

பாரப்பா மனமகிழ்ந்து மலர்க்கண் ணாலே
பதிவான அச்சயடாக் கமல மீதில்
நேரப்பா நின்றநிலைக் கொண்டு பாரு
ஜேமெல்லா தீபமடா ஊமை போதம்
காரப்பா போதமதை கண்டான் ணாலே
கண்ணறிந்து ஊன்னதனைச் சுருவாய்ப் பாரு
ஆரப்பா அறிவார்கள் ஊண்ணி லேதான்
அடங்காத ஊமைதிரா னந்தம் பாரே
381

அந்தமென்ற நவக்கிரக சொந்த மாக
ஆதியென்ற அனுக்கிரகம் அமர்ந்த வீடு
ஆ சொந்தமென்ற னந்தமென்ற வீட்டி லேதான்
சந்தமுள்ள மதியமுர்த மெத்த அண்டு
பந்தமுட னியமுந்து சொந்த மாக
பசுநிற பாலமுர்தம் பதிவாய்க் கேள்ரு
சிந்தையுட னந்தமுர்தம் கொண்டு தொந்தால்
சிவசிவா சேகஞ்சிவ யோகி மாமே
382

யோகமென்ற சிவயோக மமுர்த பானம்
உத்தமனே வாசிசிவ யோக தீபம்
யேகமென்ற தீபமதை மனதைப் பாக்க
யென்னசொல்வேன் பருதிமதி யருக்க வாகும்
தேகமென்ற ரூபமடா தேவ ரூபா
திருவான ரூபமடா சத்தி யாச்சு
பாகமென்ற சத்திதன் குயோரம் வாசி
பதிவான வாசியது ஆவா தானே
383

ஆவாயென்ற அக்கனையாள் சுவாலை யாலே
அண்டரண்ட பதங்களெல்லா மாடா லாச்சு
மேவாயெங்கு பாடுனதோர் சிலம்பா னோசை
வேதாந்த சத்தமடா சௌவாயாற் கேட்கும்
உவாநின்ற சத்தமது சௌவாயல்க் கேட்டால்
திருவான ஆதாரஞ் சுத்த மாச்சு
தாவாநின்ற ஆதாரஞ் சுத்த மானால்
சச்சிதானந்த பூரணமா யருக்க லாமே
384

63:அ. யருக்கவென்றா ஆதார மூலம் பாரு
யருகடரும் வொன்றான கருவைப் பாரு
அருக்கருடன் வாசினிலை புகந்து பாரு
உண்மையென்ற மவுனரச முண்டு தேறு
திருக்காவே காவாயநால் தன்னை பாரு
திருவான பூரணத்தில் நிறைமாய் நில்லு
பெருக்கமுள்ள சிவயோகம் அந்தம் பாரு
பேரண்டங் சதியெனவே பாலமாய் நில்லே
385

அண்டகூரணம்

பலமாக யின்னமொரு கருவைச் சொல்வேன்
பேசாத பற்பமடா அண்டக் கூரு
குலமான அண்டமடா ஞான மார்க்கம்
கூடிநின்ற மார்க்கத் துடனே மைந்தா
தலமான கருவறிந்து அண்டந் தன்னை
தன்னுள்ளாய் கட்டுவகை தபடங் கேளு
நலமான கண்டுருமிடி சூரங் கூட்டி
நன்றாக சமரசமாய் நாதகு சேர 386

சேர்ந்து ..ஏர.மதில் மைந்தா கேளு
சிவசிவா ஞானமென்ற அண்டந் தன்னை
பாத்தியமாய்த் தாணுத்தில் பதிவாய் மூடி
பத்தியுடன் தன்னறிவாய்ப் பாகம் பண்ண
சாந்துநின்ற அண்டமடா கெட்டி யாச்சு
சங்கையுடன் கட்டுனதோர் குழிந்து நின்ற
தோடகத்தி நன்றாகச் ..குழ்க்கி.. வதி தால்
ஆ. சுகமான வெள்ளைமஞ்சள் சுத்த மாமே 387

சுத்தமுள்ள வெள்ளைமஞ்சள் சாறு வாங்கி
சுகமாக அமுர்தமென்ற தேனிற் ..போட்டு
பத்தமுள்ள ரசாதனிலே நவநாள் வைத்தால்
பாலகனே திவ்யாயாச பான மாகும்
உத்தமொரு பானமதை பானம் பண்ண
உனக்கேதா யில்லையடா யுண்மை யாச்சு
சித்தமுடன் நீயறிந்து உண்மை யான
தேன்மருதை பானமதை தினமும் கொள்ளே 388

சித்தண்ட கற்பம்

40. மற்றுமொரு செய்முறை கீழ்வருமாறு:—
அதனைச் சித்தர்களின் வைராக்கியமாக நீ
வைத்துக் கொள்வாய். அண்டம் கட்டுவதற்கான
விவரம் கீழ் வருமாறு. கும்பத்தில் சாராயத்தை
-யும் உன்மத்தஞ்சாற்றையும் சிறுநீற்றையும்
ஊற்றி அண்டத்தை அதனுள் வைக்கவும்.

41. அனலில் மேற்சொன்ன கும்பத்தை வைக்கவும்.
அனல் நன்கு மூட்டிய பிறகு சாறுவகைகள்
கொதிக்கும். அப்போது அண்டமானது கட்டிப்
போகும். இந்த அண்டத்தின் தோலினை நீக்கி
பீங்கானில் கருவைப் போட்டுக் கொள்க.
அதனை வெயிலில் வைத்து காய வைத்து
எடுத்து வைத்துக் கொள்ளவும்.

கொள்ளடா கொண்டரசம் கொண்டா யானால்
உறுதி யாகுமடா ஆசி யாகும்
நில்லடா அடிஅண்டு மௌனமாய் நின்று
நினைவான அருவண்டு நேத்திக் கணவன்
மெல்லடா நியருந்து கணவனைப் பாரு
ஆரசுகொண்டு பாராகுத மெல்லப் பாரு
உள்ளடா உன்மனக் கண்ணாற் பார்த்தால்
உத்தசிவ சத்திமய மொன்றாமம் பாரே
389

சித்தண்ட கற்பம்

பாரப்பா இன்னமொரு பாகஞ் சொல்வேன்
பத்திசுத்தி சித்திவியா ராக்கிய மாக
காரப்பா கருவான அண்டம் வாங்கி
கருவாக கட்டுதற்கு ஆமரஞ் கேளு
மேரப்பா வென்றதொரு குமபந் தன்னில்
வெறியான சாராயம் மத்தஞ் சூறும்
ம.அ. நேரப்பா தன்னகுளி கூட வாட்டு
நேர்மையுடன் அண்டமதை நினைவாய் வையே
390

வைத்ததொரு அண்டமதில் அனலைத் தாக்க
மார்க்கமுடன் சாறுவகை கொதிக்கும் போது
மெத்ததொரு அண்டமெல்லாங் கரிப்புப் போகும்
மேலான அண்டமதை ஆறுமப வாங்கி
தைத்ததொரு அண்டமதின் ஓதாடு போக்கி
தன்னறிவாசீ மிஞ்சாணிக் கணவு வாங்கி
வனத்தமிக்க கருவதனை ரசாயல் வைத்து
நன்றாக காயந்தபதம் தென்னாப் பாரே
391

பாரப்பா ரவிதனாலே நன்றாய்க் காய்ந்தால்
பக்குவமாய்த் தானெடுத்துப் பொடியாய்ப் பண்ணி
நேரப்பா பொடிக்குளே காயஞ்ச தாரை
நீ மகனே தான்கொண்டுக் கலந்துக் கொண்டு
காரப்பா சற்குருவைத் தியானம் பண்ணிக்
கருணையுடன் அமிர்த சர்க்கரை கொண்டால்
ஊரப்பா கொண்டுநின்ற வியாதி யெல்லாம்
ஊலகமடா தேகமது ஊகுசை யாமே
392

ஊகுசையென்ற அண்டமதைக் கொண்டா யானால்
வேதாந்த வாசியது புருவந் தேதி
ஆ. அந்தரங்க. சூதமது நெஞ்சற் காணும்
ஆனந்த சிவயோக மாகி மாகும்
செகுசொள் மறைவேதமது நாலு தானாய்
தெகுட்டாத அமிர்த பூரணமாய் நிற்கும்
தஞ்சமென்ற பூரணந்தால் தானே நின்றாள்
சதாயோக மானசிவ யோகி யாமே
393

ஆமப்பா சிவயோகந் திருந்த வென்றால்
ஆதியந்த சத்தசிவ பூசை வேணும்
தாமப்பால் மதியமிர்தம் கொள்ள வேணும்
கருணையுடன் சாந்திரங்கள் பார்க்க வேணும்
தாமப்பா தன்னிலையால் மலங்கள் சாற்றி
சதாகால அருவமதிற் சார வேணும்
ஓமப்பனின் அமிர்த. சஞ்சீவி .. யான வாசி
வ ரீதி ... சிவயோக மென்றறிந்து பாரு
394

45. மேற்கூறிய வாறு செய்ய உடலானது
மந்திரத்தினாலான பீடமாக விளங்கும்.
அமிர்தக்கலையாலான பீடமாக விளங்கும்.
காட்சிப் பொருளாய் நிற்கும் அம்மையை
அறிய முடியாது அறிந்தவர்கள் பலர்.

46.

மனத்தை ஒருநிலைப்படுத்தி ஒடுங்கச் செய்து
மூச்சினை அடக்கி புருவ இடைக்கமலத்தினை
அடையாது ஆசையினால் காமத்தில் சிக்கி
வீழும் பாவையரே! புருவமிடை அமைந்துள்ள
தீபத்தைப் பார்த்தால் சச்சிதானந்தம் பரமா
-னந்தம் கிட்டும்.

47. முத்தமிழில் சிறந்து விளங்கும் அகத்தியனே!
கருமான மௌனத்தை அறிந்து கொள்வாய்.
மேலமான மூச்சினால் இரேசகமும் பூரகமும்
செய்து கும்பத்தில் நின்று மணிவிளக்கின்
சோதியைப் பார்த்தால் திசைகள் தெரியும்.
சோதியின் மகிமை என்று அறிந்து கொள்வாய்.

வாசியோ தேகமடா மந்திர பீடம்
மகத்தான அமிர்தகலை யான பீடஞ்
கா.பு.க.ண. பீடந் தன்னை மைந்தா
காற்பதி யாமலட்டா வேது செய்வோந்
தெளிசையாய் நின்றதிரு மாது தன்னை
செகத்தோர் கறியாமல் மாண்டா ரையோ
உருசையுடன் தன்னகத்தை மாலமாய்க் கட்டி
தென்றுமடந் தனையறிந்து இருப்பீர் நீலே
395

இருங்கிடமாந் தனைநிறுத்தி வாசி யேறி
65.அ. உறுதியுடன் அருவமாய்க் கமல மீதில்
அடங்கிஹனை யாருதெரிகு மாட்டா மகிந்தான்
ஆசைகொண்டு கா.லம்.. யதனைற் அக்கி
திடங்கனிய அருளைவருத்தப் பாவா மாரே
திருவான அருவமதில் தீபம் பார்த்துத்
திடங்குறைந்தும் குடமாத்தின் தலத்தில் நின்றால்
சச்சிதா னந்தபர முத்த னாச்சே
396

சித்தமிச்சேர் அலத்தியமே பற்றா வானே
சிறையான கருமான மொன்று கேளு
சித்தகில்லை மூலமதின் வாசி யானே
சிவசிவா ரேசகடு பூரகமும் பண்ணி
சாத்தமுடன் குடம்பத்தில் நின்று கொண்டு
தாண்டாத மனோவாக்கின் சோதி பார்த்தால்
பத்தமெடேனத் திசையுந் தோணும் பாரு
பதிவான சோதிப்பு மகிமை தானே
397

48. இத்தகைய மகிமையினால் அண்டத்தில் ஏதி புருவமத்தியாயுள்ள சோதியானை மேலாகிய கண்ணினால் பார்க்க ஆதாரம் விளங்கும், ஒளிமயமாயும் வண்ணமயமாயும் தோன்றும், அண்டத்தைத் தங்கமென்று தான் கூற முடியும்.

49. வல்லாரை கற்பம்

உடலானது பொன்மயமாவதற்கான கற்பம் கீழ்வருமாறு. வல்லாரை மூலிகையை எடுத்துச் சாறு பிழிந்து ~~எடுத்துக்~~ கொள்ளவும். ஆறையின் சமிலத்தை இருத்துக் கொள்ளவும்.

50. வல்லாரையைத் தண்ணீரில் வேகவிட்டு காயவைத்துக் கொள்ளவும். அதனுடன் ரவி பீசத்தைச் சமனெடுத்து சேர்த்துக் கொள்ளவும். இவையிரண்டையும் கல்வத்தில் போட்டு தனிலமாய் நன்கு மைபோலாகும் வரை அரைத்துப் பீங்கானில் பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

தானான மகிமையானா லண்டந் தேறி
சலனிள் மயமான சோதி தன்னை
தேனான அருவமதில் மலர்க்கண் மாற்றி
சிவசிவா அஃசைவயற்று நின்றா யானால்
ஊனான ஆதார மானா தார
சுத்தமனே நிறமயமா யுடனே காணும்
வானான அண்டமதை யின்ன சொல்வேன்
மதுகாத அண்டமடா தங்கந் தானே
398

வல்லாரை கற்பம்

ஆ. தங்கமதா யங்கமது தானே யாகத்
தன்மையுள்ள கற்பமொன்று சொல்லக் கேளு
அங்கமதி லங்கமதாய் நின்று வாழு
மாதியென்ற வல்லாரை ஆர்தான் காண்பார்
பங்கமில்ல நினைந்தனமே பயாரை செய்து
பத்திய மானசாறு மாதந் தன்னில்
சங்கையுட னங்கமதா யாரை தன்னை
சுழிலமதை தன்வசமாய்த் தானே வாங்கே
399

வாங்கியதோர் வல்லாரை தன்னை மைந்தா
மார்க்கமுடன் தன்னிழலா லுலர்த்தி
பாங்குமேறத் தானடத்தில் மைந்தா கேளு
பதறாதே ரவிபசுக்கு சாயாய்க் கூட்டி
சூங்கமாய்க் கல்வமதி லாட்டுங் கொண்டு
சங்கையுடன் தயாவமதாய் நின்றா யாட்டி
ஆங்கதிகொண்டே மகனே மைப்போல் லாட்டி
அருமையுடன் பாங்கானத் பதனம் பண்ணே
400

பதமாக பதனப்படுத்தி

51. இவ்லேகியத்தைப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.
காட்டில் வெயிலில் நின்று பூசை செய்து பின்
அதனின்று 488 மி.கி அளவெடுத்து காலை, மாலை
கொடுக்க தேகம் பலம் பெறும்; அறிவுண்டாகும்.

52. மூச்சானது முறைமையால் ஒடுங்கி இருந்து
புருவத்தின் இடையில் ஒளியாக நிற்கும்.
கைலாசமாகிய அத்தேகத்தில் பூரணமாய்
இருக்கும் அவ்வீட்டைப் பூசை செய்யவும்.
சதாசிவன் போன்று சிவயோகத்தைச் செய்யவும்.

53. சிவபூசை, சக்திபூசையைச் செய்து கொள்ளவும்.
வேதாந்தம், பூரணத்துவத்தை அறிந்து மனதளவில்
பூசை செய்து கொள்ளவும். அப்போது உடலானது
வச்சிரம் போலாகும்.

பதனம்வைகு பதனமதாய்ப் பதனம் பண்ணி
பாலகனே மானதமாய்ப் பூசை பண்ணி
இதனமாதிக் கானகத்தில் ரஜாயல் நின்று
வேதாந்த வேகயத்தில் மைந்தா கேளு
அதனமடா யெடுக்காமல் பணவடைதா னாகந்து
கெ.அ. அப்பனே அந்தசந்தி கொண்டா யானால்
மதனமாய் நின்றதொரு தேகந் தன்னில்
மகத்தான அறிவு பூரணமாம் பாரே
401

பாரப்பா பூரணமாய் வாசி நின்று
பாழான புருவமதில் தீபங் காணும்
நேரப்பா நின்றதொரு தீபங் கொண்டால்
நின்றுபல் கைலாசத் தேக மாச்சு
காரப்பா கைலாச அக்ஷி மேல்
நிமலரசம் பூரணையின் நிறைகாம் ஊடு
சாரப்பா அவ்விடமடைப் பூசை பண்ணி
சதாசிவன் போலவே யோகந்தானே செய்யே
402

செய்யடா சிவபூசை சக்தி பூசை
தீர்க்கமுடன் மார்க்கமதாய்ச் செய்து கொண்டு
மெய்யடா சொல்லுகிறேன் அப்பால் மைந்தா
வேதாந்த பூரணத்தைத் தான் நித்த
பொய்யடா போகாமல் மாதாந் தன்னில்
பொருந்தி மனதிலவமல் பூசை பண்ணு
கையடா தொய்யாது காயம் காயம்
காயமது வச்சிரம் போலக்காகை மாச்சு
403

54. புருவத்தினிடையிலுள்ள ஒளியை காலை, மாலை இரண்டு வேளையும் ஏற்றவும். காமப்பால், கானல்பால் இருவைப் பார்த்து கமலரசமாகிய அமிர்தத்தைக் கொள்ளவும், தானே சிவனாய் நினைத்துப் பார்க்கவும், தன்னை உலகிற்குக் கொடுத்தவனைத் தானாய் நினைத்து பார்க்கவும். சோமப்பாலில் கிடைக்கும் சிவகாமப் பால்தான் அகாரமாகிய சோதியாகும்.

55. சதுரகிரி மலையுச்சியின் மீது விளங்குகின்ற கற்பூர தீபத்தை ஆதியான தீபம் என்பர். அருள்ஞானத்தி லெழுந்த ஆவியான சிவாசகாந்தம் நிலையான நெற்றிக்கண்ணை ஒங்காரத்தைப் பார்த்துக் கொள்வாய்.

56. புலத்தியனே! புத்தியைக் கேட்பாயாக! சத்தத்தினை மறந்து தன்னிலையை அறிந்து வழியினை அறிந்து நினைவு மயங்கி மனம் போன போல் திரிந்து மூச்சானது சீறி எழுந்து அதனால் உடலானது இளைத்து மெலிந்து சுருங்கிக் காணும்.

ஆமப்பா கனகமென்ற அருவ மதா
லந்திசந்தி நயனவொளி நாட்டம் பாரு
காமப்பால் காணப்பால் கருவைப் பாரு
ஆ. கேசரச அமுர்தமதைக் கனிவாய்க் கொள்ளு
தாமப்பா தானவனாய் தன்னைப் பாரு
தன்னைதந் தான்பார்த்து தனதாய் நின்று
சோமப்பால் சொலிந்த சிவவாமப் பால்தான்
சித்தமுள்ள அகாரமடா சோதி காணே
404

சோதியென்றால் சதுரகிரி உச்சி மீதில்
துலங்குகின்ற கற்பூர தீபந் தீபம்
ஆதியென்ற தீபமடா அருள்ஞா னத்தி
அனலகுந்த ஆவியடா அவாச சாந்தம்
நீதியென்ற அந்தமதைச் சொந்த மாக
நிலையறிந்து கலையறிந்து எந்தக் கண்ணை
ஓதியந்த ஓங்காரக் கம்பந் தன்னை
ஓருருவ மென்றந்தக் கண்ணை பாரே
405

பாரப்பா மேருவேந்த ராசபத் திராள்
அத்தியுள்ள அலத்தியனே அத்தி கேளு
நேரப்பா நின்றசத்தந் தன்னை மறந்து
நிலையறிந்து வழியறிந்து நினைவு மங்கி
வீரப்பா கொண்டுமௌனம் பேரான் போக்கள்
மெட்டிசமையாய்த் திரைந்தலைந்த மெய்மை கேளு
சீரப்பா வாசியது சீறாச் சீறி
தேகமது தான்குளிர்ந்து திரையும் காணே
406

57. உடலில் திரையை மீறி பித்தநீரானது மயிர்த்துவாரங்களின் வழியாகக் கசிந்து வெளிவந்து அங்கங்கு பூத்து மயிர் வெளுத்துவிடும். நரம்பினுடைய கட்டுக்கோப்பு விலகி கண்ணில் ஒளியானது குறைந்து உடலின் பலம் குறைந்து விடும். உடலின் பலம் குறைவதனால் மனதின் பலமும் குன்றி பேய் போலாகி விடுவர். உடம்புள்ள பாவியாவர். எனவே நாதாந்த (சிவன்) முத்திரையை ஏற்றுக் கொள்வாய்.

58. மேற்கூறிய பலமின்மையிலிருந்து தேறுவதற்கான வழியொன்றுண்டு. தீமையினின்று விலகி பேறு பெற வேண்டுமெனில் காலை, மாலை புருவ மையத்தினிடை உள்ள ஒளியைப் பார்த்து மாறும் முறையை அறிந்து மூச்சினை அடக்கிக் கொள்ளவும் (சந்திரனையும் சூரியனையும்) அறிவை ஒன்றி சேர்த்து அறிவுரை செய்தபடி புருவமத்தியில் ஒளியைக் காணுவாய்.

59. புருவமத்தியிலுள்ள ஒளியினைக் கண்குளிர பார்க்காது காடு, மலைகளில் அலைந்து திரிபவர்களுக்குப் புத்தியில்லை. மூலத்திலுள்ள மூச்சினை அடக்கி புருவமத்தியின் தீபத்தைப் பார்த்து நம் உடலைப்பாதுகாத்தால் உலகையே அற்றி வரும் ஆற்றலைப் பெறலாம்,

காணவே திரைமீறி பார்த்த சீர்தான்
கலந்துமயர்ந் துவாரமதில் கசிந்து மீறி
67அ பூணவே சூத்திருந்து மயர் வெளுத்துப்
சூட்டிநின்ற நரம்பாட கட்டும் ஊட்டுப்
போணவே நேத்திரத்தால் ஒளி மயங்கிப்
பாலங்குறைந்து மனந்தளர்ந்துப் பேய்போலாகி
நாணவே உடம்பெருத்த பாவா பாவா
நாதாந்த சித்திரையை நயந்து தேறே
407

தேறுவதுக் கானசத்தி சொல்ல சொல்ல
தீர்க்கமுடை நிலையாத திறந்தா னென்ன
வேறுபெற வேறுமென்றா லந்தி சந்திப்
பாலமான அருவமையத் தொளையைப் பார்த்து
மாறுவாதந் தன்னையறிந்து வாசி சூட்டி
மதியான சந்திரனை ரவியிற் சேர்த்து
தேறுசுற உபதேசப் படியே நின்று
கருவான அருவமதிற் தீபங் காணே
408

காணவே அருவமதிற் தீபந் தன்னைக்
கண்குளிரப் பாரமல் கருந்துங் கெட்டுப்
பூணவே காடுமலை தனலே லைந்துப்
போனாதி னாளுங்களுக்கு அந்தி யுண்டோ
தோணவே மூலமதின் வாசி யாலே
சுருதிமுடி வானதொரு தீபம் பார்த்து
போணவே இருந்ததைப் பேணி னாக்கால்
பேரன்பிற் சத்தியரக் கெவுன மாட்டம்
409

கடுக்காய் கற்பம்

60. நல்ல வண்ணமாய் வாழ்வதற்கு கற்பமொன்று
தருகிறேன்! கேழ்வருமாறு! மவுனமுள்ள வழியாகும்
கடுக்காய்களில் வெண்கடுக்காய் விசேடமானது.
சங்குமலை அருவியிலே அதிகமாய் இருக்கும்,
கடுக்காயை எடுத்துக் கொள்ளவும்.

61. கடுக்காயை எடுத்து இடித்துச் சுத்தி செய்து
கொள்ளவும். கம்பி , ரவி யையும்
இதனுடன் சேர்த்து நன்கு ஒன்றாக விரவி
பாத்திரத்தில் போட்டு ஐம்பது நாள் வைத்துக்
கொள்ளவும். ஐம்பது நாட்கள் கழிந்த பிறகு
சுத்தமான தண்ணீர் ஊற்றவும்.

62. அடுப்பெரியவிட்டு அதன்மீது முற்குறிப்பிட்ட
பாத்திரத்தை வைத்துக் கொள்ளவும். அதிகமாக
பொங்கிவிடாத அளவுக்கு எரியூட்டி பிறகு
இறக்கி கீழே வைக்கவும். அதிலுள்ள ~~கஷாய~~ மருந்தைக் கல்வத்தில்
ஊற்றி உவருப்பையும் சீனக்காரத்தையும் கற்பூரத்
-தையும் சேர்த்து கல்வத்தில் இட்டுப் பொடித்துக் ~~போடவும்~~
கடுக்காயாலனை இலேகியத்துடன் சேர்த்துக்
கொள்ளவும்.

கருக்காய்

கற்பம்

ஆ. கெவனுடன் வாழ்வதற்கு கற்ப மென்று
கிருபையுள்ள அகத்தியனே சொல்லக் கேளு
மேவனுள்ள மார்க்கமடா மகத்தாள் கற்ப
மார்க்கமுள்ள நிலையுடனே மாங்க ருக்காய்
தகனமுள்ள வென்கடுக்கா யுடைமை யாகு
சாங்குமனை அருவையகல மைந்த அன்று
நவமான நவக்கிரகந் தன்னாள் மைந்தா
நாதாந்தக் கடுக்காயை நயமாய் வாங்கே
410

நயமான கடுக்காயை வாங்கி மைந்தா
நன்மையுடன் தானடுத்துச் சுத்தி பண்ணி
நெயமாகக் கபமையுடன் ரசாயுங் கூட்டிச்சேர்
ஆன்றாய்த் தான்பசறிப் பாண்டத் திட்டு
பயமானத் குடிலமதி திறவ தற்குப்
பாலகனே கூடத்தில் நவநாள் தானதே
சுயமாக நவநாள்க் சென்றாங்கு மைந்தா
சுத்தசைவ் தொங்கசம்வாட்டுச் சொல்லக் கேளே
411

சொல்லக்கேள் இருப்பெற்றாய் பாகம் பண்ணு
இருமைந் தாகுனறப் பொங்கா மஸ்தான்
இன்னக்கேன் முன்போல.. வைத்து வாவும்
மைந்தா னெதுக்கு கல்வந் தாட்டி
சொல்லக்கேள் உவற்புவும் சீனக் காரமும்
68அ. சிவசிவா கற்பூரம் மூன்றுங் கூட்டி
மெல்லகேள் கல்வமதில் பொடித்து மைந்தா
வேதாந்த கடுக்காய் உலையித்துச் சேரே
412

63. மேற்சொன்ன அனைத்தையும் ஒன்றாகச்சேர்த்து
கல்வத்தில் போட்டு அரைத்து பாத்திரத்தில்
எடுத்து வைத்துக் கொள்ளவும். அதனைத்தூசி,
தேறு ஆகியவை வந்து கலக்காதவாறு வெயிலில்
காய வைத்துக் கொள்ளவும். காய்ந்த பிறகு
எடுத்து அதனுடன் முட்டையைச் சேர்க்கவும்

64. அவ்விழுதை நன்கு கலக்கவும். குழம்பாக
உள்ள அதை நன்கு கிளறவும். சங்கையுடன்
இரவிபீசம் எட்டும் இரண்டும் ஆகிய இவற்றைப்
பொடித்துப் பாகில் சேர்க்கவும். வெயிலில்
அப்பாகை வைக்கவும். காய்ந்த பிறகு
கல்வத்தில் போட்டு நன்கு அரைக்கவும்.
வழித்து பீங்கானில் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

65. மேற்குறிப்பிட்ட இலேகியத்தில் நாதியந்தத்
தைலத்தைச் சேர்க்கவும். கல்வத்தில் போட்டு
அரைத்துப் பரணியில் அடைத்துக் கொள்ளவும்.
அதனைக் காலை, மாலை வேளைகளில் எடுத்து வைத்து
இறைவனை நினைத்துத் தியானித்து நெற்றியில
புருவத்தின் மையத்திலுள்ள தீபத்தைப் பார்ப்பாயாக

சேர்த்துமிகை நன்றாகக் கல்வத் தாட்டித்
திறமான பாண்டமதில் செலுத்திக் கொண்டு
பார்த்திபனே தீபசேற்றைப் பரக்கா மல்தான்
பாலகனே ரவிதனி லேகாயப் போடு
சோத்தியங்கள் வாராமல் நன்றாய்க் காய்ந்தால்
சொல்லுகிறேன் இன்னமொரு பாகஞ் கேளு
சாத்தியதோர் லேகியத்தில் ஞானி அண்டந்
தன்மையுடன் அண்டமாத இளசாய் வாங்கே

413

வாங்கிநன்றா யருக்குவ மொன்றாய்ச் சேர்த்து
மார்க்கமுடன் லேகியத்தில் ஊட்டுக் கிண்டி
சாங்கமாய்க் குழம்பது போலநன்றாய் கிண்டி
சங்கையுடன் ரவிபீசம் ஏட்டும் ரெண்டும்
பாங்குறைபரத் தான்பொடித்துப் பாகில் சேர்த்தும்
பத்தியுடன் ரவிதனி லேவைப் பண்ணி
தாங்கியே கல்வமதில் வைபோ லாட்டி
தன்மையுடன் மூலிகாணல் பதனம் பண்ணே

414

பதமான லேகியத்தில் மைந்தா கேளு
ஆ. பத்தியுட நாதயந்தத் தையிலம் வார்த்து
சாதகமாய்க் கல்வமதில் நன்றா யாட்டி
சாங்கமாய்ப் பரணிதனி லடைத்துக் கொண்டு
சுகமாக காலைதவ மாலை சந்தி
சுத்தமுடன் ஆண்டொன்று செபித்து மைந்தா
நிதமாக சற்குருவைத் தியானப் பண்ணி
நெத்திநடுப் அருவமதில் தீபம் பார

415

66. நாள்தோறும் அந்த தீபத்தைப் பார்த்து
கடுக்காய் இலேகியத்தை ~~[illegible]~~ 48 மி.கி
அளவு எடுத்து கருணையுள்ள இறைவனை
நினைத்து நாக்கில் வைத்து அமிர்த ரசத்தைக்
கொள்வாயானால் (உண்டால்) உத்தம
தேர்ச்சியடையும் வாசியானது இருக்கும்.

67. அவ்வாறு மேற்சொன்னவாறு வாசித்திருந்து வெளிப்படும்
மூலாதாரத்தினால் நோயெல்லாம் தீர்ந்து போகும்.
தேங்கி நிற்கும், பலநாட்களாக வெளிப்படாது
இருக்கும் மலம், நீர் வெளிப்படும். பலமருந்து
-களாலும் தீராத வயிற்றுவலி தீர்ந்துபோகும்.
போலப் பீனசங்கள், மூல நோய், செங்கரப்பன், கருங்
கரப்பான், சோகை நீங்கும். பனிரெண்டு வகை
சோதியும் உன் கண் முன்னே தோன்றும். அதனைப்
பார்த்துக் கொள்வாய்.

68. தினந்தோறும் தெரியும் சோதியைப் பார்த்துக்
கொண்டு அதற்குக் கவனத்தோடு பூசையும்
செய்து கொள்வாய். அப்போது நீ தேடிய பொருள்
உனக்குக் கிடைக்கும். உன் நிலையைப்
உணர்ந்து கொள்வாய். அவ்வாறே முறைகளி
-னின்று தவறாமல் இருந்தால் அனைத்து வகை
சித்துகளும் நீ கைவரப் பெறுவாய்.

பாரப்பா தீபமதை தினமும் நோக்கிப்
பதிவான கருக்காய் லேகியத்தை மைந்தா
காரப்பா பணவிடைதான் கையால் வாங்கி
கருணையுள்ள நாரணைக்குக் கறிவாத் தேதான்
நேரப்பா நிலையறிந்து நாவால் வைத்து
நீ..தின்றும் அருள்தரசங் கொண்டா யானால்
நேரப்பா நினைந்தோறு தேகந் தேறுந்
சிவசிவா வாகியது நிறக்குந் தானே
416

நிற.கீ.கின்ற ஆதார மூலந் தன்னால்
சொல்லுகின்ற வியாதியெல்லாந் தீறிப் போகும்
உரத்துடனே மேகங்கள் கழிந்து போகும்
இரங்காத குன்மவலி ஓடிப் போகும்
சிரத்துடைய பீனிசங்கள் சூலை ரோகம்
செவிகறுப்பன் கருங்கறுப்பன் சோகைபோகும்
பாரத்துடைய சோதியது பனிரன் றேதான்
பார்க்கு முன்னே தெரியுமது நேயே காணே
417

கு.அ. புத்திபுஷ்பா. புஷ்தியதனை அந்த மான
பதிவான காயத்தைப் பதன மாக
இந்தமுட னுதினமும் நன்றாய்ப் பார்த்தால்
தெளித்து மானதமாயப் பூசை பண்ணி
உத்தமனுக்கு உபரமதாய் நன்றாய்த் தோறும்
உள்ளதுடைய சீவனை அன்மை பாரு
சாத்திரமே தவறாமல் நின்றா யானால்
சகலத்து முன்துவசம் தன்றால் மாட்சி
418

69. தன்னிலையையே தன்னால் அறிய இயலாத முட்டாள்கள் சாத்திரத்தின் பயனை அறிந்து கொள்ள இயலாத பிழைவாதமுள்ள மடாவான், வழியறிந்து விண்ணொளியை நோக்க வாசியின் நிலையை அறிந்து கொள்வர். எண்களின் இயல்புகளைக் காணாதவர்கள் எட்டெழுத்தையும் இரண்டெழுத்தையும் அறிந்து கொள்ளாது உழன்றே என்பர்.

ஞான நெறிகளில் ஒன்றாகிய

70. நாதாந்தத்தைப் பார்த்து கண்ணொளியைப் பொருந்தி நிற்பாயாக! தன்னுள்ளே இருக்கும் அனியை தான் நாள்தோறும் பார்க்க சூரியகலை, சந்திரகலை ஆகியவை முன்னைப் காட்டிலும் உறுதியாய் ஆகும். தன் உடலும் மனதும் பலம் பெறும். உடலானது பலமானால் அட்டாங்க யோகமும் கை வரப்பெறும்.

தன்னாலயே தானறியா சூடர். தானுஞ்
சாத்திரத்தின் பயனறியா சண்டி மாடு
கண்ணறிந்து உன்னாளையைக் கருதிப் பார்க்க
கருத்துடனே வாசிநிலைக் காலைக் காணார்
எ உண்ணறிந்த அட்சரத்தி னாயலிது காணார்
எலெட்டரென்று மறைமாமசி ஏயுக யென்பான்
உண்ணறைந்த யேகபரா பரந்தான் மைந்தா
மெஞ்ஞான மானதரு உளக்குந் தானே
419

உளக்கூட நாதாந்த தன்னைப் பார்த்து
உண்ணிறைந்த தன்னாளையை மேவா நீஞ்சு
பாக்குடன் தன்னாளையை நினைவு நோக்க
பருதிமதி சுடர்மூன்றும் உருதி யாகும்
பாலக்கனலை சுடர்மூன்று யுருதி யானால்
ஆ. பாசகாது தன்னகந்தான் பாலமாய் நிற்கும்
உடலுக்குள்ள தேகமது பாலமாய் நின்றால்
வந்துதடா அஷ்டாங்க வளமை தானே
420

பூரண லேகியம்.

வளமையுள்ள பூரணலேகியந்தான் மைந்தா
மார்க்கமுடன் சொல்லுகிறேன் வரிசை யாக
பளமையுள்ள ஜாதிக்காய் ஜாதி பத்திரி
பால்கோண கிராம்புடனே யேலஞ் சுக்கு
தளமையுள்ள வால்மிளகு அதிமது ரமொன்றா
தான்வறுத்து சூரணமே தானுஞ் செய்து
நலமையுள்ள சூரணத்துக் கிடைதான் மைந்தா
நாதாந்த மூலந்தனை நயமாய்ச் சேர
421

சேர்ந்துமகை நன்றாக ஆரவா மைந்தா
திறமாகத் . . . தீ... நீராலே நன்றாய்
பார்த்தபனை வெள்ளுடன் பருச தாரைப்
பக்குவமாய்த் தான்கலந்துப் பாகு செய்து
போத்தியதோர் குரணத்தை ஆட்டுக் கண்டி
புத்தியுடன் மெழுகுபதந் தன்னில் வாங்கி
நேத்தியுள்ள மாஞ்சாணாந் பதனம் பண்ணி
னேமமுடன் சற்குருவைத் தியானம் பண்ணே
422

பண்ணப்பா சற்குருவைத் தொழுது போற்றி
70அ பாலகனே வேகியைத்தைப் பத்தி யாக
நண்ணப்பா சூரணமுந் தயவாய்ச் சேர்த்து
நலமாகத் தேனதிலே ஆட்டுக் கண்டி
சின்னப்பா நின்றிலவ்கு வாசி யேறி
சினையான சினையால் மலதை வைத்து
உன்னப்பா பணவிடை தானூரணத்தை
உத்தமனே கொண்டுநிலை தன்னைப் பாரே
423

பாரப்பா தன்னிலையால் நேரே நின்றால்
பரமகய லாசமது பணிரெண் டேதான்
நேரப்பா யாறுதயத்தில் தானே தோறும்
நிகுபம் வாலக்கொளிபோல் நேரே காணும்
காரப்பா கருணைவாசி மலர்க்கண் பார்த்து
கடாடசமுடைய வாழுதியுத் தலமாய்ப் சூழ
சாரப்பா தன்னகமே கெதியென் றெண்ணி
சார்ந்துநிலை பெத்தவர்கள் தன்மை மேலே
424

தன்மையென்ன சகலமுயர்ப் பயங்க ளெல்லாந்
தன்தான் வாசியதாய் தானே நிற்கும்
உண்மையுள்ள தேவதைகள் வசிய மாகும்
உத்தசிவ மந்திரமும் வசிய மாகும்
நன்மையுள்ள வாசியது வசிய மாகும்
நாலான காரியங்கள் சித்தி யாகும்
திண்மையென்ற தேவனைகள் உன்னைக் கண்டால்
திந்துநன்மை தான்வலந்து செய்வ மாமே
425

ஆ. செல்வமுடை னியருந்து வாழ்வ தற்கு
சிவசிவா பூரணவே யந்தில் மைந்தா
அல்லபமாய் சும்புஅந் தரா பற்ப
மார்க்கமுடன் தான்சேர்த்துக் கொண்டா யானால்
உன்னமதில் நின்றதொரு நோய்க ளெல்லாம்
ஓமடிந்து போகுமடா வாமத் தானே
திவ்லகட்டு சாவா முன்னே நின்று
சிவசிவா ஜோதியைப் போலதொசிப் பாரே
426

தொசித்த சோதியடா கமலக் கண்ணு
திருவான மூலமடா அச்சி வட்டந்
தொசித்த போதுமனே. சித்தி சித்தி
யாகுமடா நினைமே நோக்க
தொசித்துச் சிவயோகத் திருந்தா யாகில்
செங்கதிர் = போல மங்காத தங்க மாகும்
தொசித்த தங்கமடா அண்டச் சோதி
திருவான சோதியடா வாலை தானே
427

வாலைபதந் தனையறிந்து பூசை செய்ய
மார்க்கமுள்ள அகத்தியனே சொல்லக் கேளு
வாலையென்ற மனோன்மணி தங்க மாது
மந்திரகலை யுந்தமவ மவள மாது
வாலைவய தான்கிறு மாது தன்னை
மார்க்கமுடன் தன்னகம்போல் வணங்கி செய்து
வாலைத[illegible] முந்த ரசபான மூட்டம்
71-அ மகத்தான அபசார வணக்க செய்யே
428

வணக்கமுடன் அபசாரம் நன்றாய்ச் செய்து
மார்க்கமுடன் [illegible] மகனைப் போலே
தனையுடன் தான்வளர்ந்து வரும்போ தயலா
சிறுமையுடன் மங்கைமாய தன்னைக் கண்டால்
இளமையுள்ள மாதுதனை யறிது கால்
மனைட்டமுடன் தான்தொழுது மடிமேல் வைத்து
நலமையுற லிங்கார முக்கோ ணத்தில்
நாட்டமுடன் தானறிந்து நயந்து பாரே
429

பாரப்பா நயந்துமனக் கனவா னியும்
பார்க்கையிலே அகாரரச பானரு தானும்
நேரப்பா கோணதிறந்து அமர்ந்த மூலம்
நீமகனே மங்கானல் நினைவாய் வாங்கி
காரப்பா ரசதனிலே வைத்துப் பார்க்க
கண்குசும் அருணநிறக் காந்தி போலே
சீரப்பா மெழுகுத்துபோலே செந்தூர மாக்கு
நேமமுடன் ஒரு அந்திதனிற் றிலதம் போடே
430

போடப்பா திலதமது நன்றாய்ப் போடப்
புத்தியென்று சொல்லுகிறோம் புகழ்ந்து கேளு
நாடப்பா அருவுருவு சுடரையப் பத்தி
நன்மையுடன் தாபதியுந் தளமாய்ப் பூசி
ஆ.கூடப்பா நாதாந்தச் செந்தூர ரத்தை
தொட்டுமைக நெத்தியிலே போட்டு போடு
ஊடப்பா பாலப்பதற்கு வாசி கொண்டு
வேதாந்த முத்திரையை மேவாப் பாரே
431

மேவாப்பார் தந்தனனை தன்னால் நின்று
மெய்ஞான வாசிதனை வாசி யேறி
தாவாப்பார் தன்னையல் தீபம் பார்த்து
சச்சிதா னந்தமென்ற அறிவன் நின்று
ஆவாப்பாய் சுருபமதிவா ரணந்த னமந்தா
அவையடக்க மாகவது செய்க்கும் போது
தீவப்பா ஞானமுகள் கண்டோ ரெல்லாந்
தீஞ்சான சக.லமானயுந் தீரும் பாரே
432

தீருமடா அளதுதனை முகங்கள் போக்கு
சௌமாந்திர மனைமயில்லாது சிதறிப் போகும்
ஆருமடா அனைதனை நாமந் தன்னை
அறுதினைம் நினைந்தற்கு அயங்கள் அந்தாள்
தீருமடா சகலமான தோஷ மெல்லாம்
நின்னைய்கு செந்தூர நேர்மை தன்னால்
தீருமடா நாதாந்த அமிர்த போகும்
உத்தமனே சத்திபத முகந்து காணே
433

காரடா கருணைவளர் செந்தூ ரத்தில்
கருவான சபாதனிகா தானே சேர்ந்து
நேரடா சற்குருவின் பாதந் தன்னை
12·அ நொந்துமாக நெத்தியிலே திலதம் போட்டு
பாரடா கேசாதி பாத மட்டும்
பார்க்கையிலே தேகமது தீபம் போலாந்
நேரடா தீபமதில் நின்று கொண்டு
நீக்கடங்க நன்றாக சென்று பாரே.
434

சென்றுமாக பார்க்கையிலே சித்தமே லாக
சிவசிவா பாதாளந் துலதா னோரும்
நின்றிந்த நிலையாத நிலையைப் பார்த்தால்
நினைத்ததொரு மன்றுமுன்றும் ஒன்றாய் போச்சு
அன்றுமுதல் ஒன்றுவரை ஒன்றாய்க் கண்ட
அதிசயந் தானென்ன வென்றாலாதி சோதி
கொண்டுநின்ற வடிவதனை தீர்ந்து பார்க்க
குவிந்துநின்ற தங்கமடா அங்கம் பாரே
435

அங்கமெல்ல அருச்சனா தேவா மைந்தா
ஆராறிவார் கொடியிலே யொருவ ரன்று
தங்கமய மானதொரு அங்க மையைத்
தன்னறிவாய் தான்வொளிக்க தன்னைக் கண்டாய்
யெங்குமடா தன்மயமாய் வந்த மையை
யருந்துநிதம் தலையிலே வுயமை கண்டால்
பொங்குமடா பதினாறு வரைக்கு மந்தப்
சூடியிலே வடிந்தொழுகு மாகந்தை வாங்க
436

ஆ. வாங்கியெந்த தாகத்தை - கிளைத்தோரும்
வளமையுடன் உண்டுமேறா. யாளமை யாகும்
பாங்குவெற வாசியது தன்னுள் தங்கும்
பாகுகேசரியும் வாசமா யாவிடம்....
தாங்கநின்ற ஆதாரந் தன்னுள் ளேதான்
தனல்கொண்டுவாதயது தானே சென்று
பூங்கமல தன்னிலாளா மாறகா ரிக்கும்
அத்தியுடன் அருவமையம் புகுந்து பாரே
437

புகுந்துவளர் நெகுந்தொரு நாத மாந்து
ஆரணமாய் கருஅருவாய் பூரந் தப்பா
வகுந்துஅரு வாகநின்றதம் வளர்ந்து தோயித்து
மந்திரமும் தந்திரமு மாண்டு போக
உகந்துனதம் அன்னா தூறவாகி லோகம்
இடிந்து போகுடா உறுதி கெட்டு
பகுந்துநின்ற பகுத்தறிவால் தன்னை பாரு
பரமான கேசாளய திளரும் நோக்கே
438

நோக்குவது ஆதார மூலந் தன்னில்
நுண்ணறிவல் நின்றாதொரு சுழிமுனை மீதில்
வாக்குமன மொன்றாக வாசி பூட்டி
வாசிவளர் பூரணத்தை மனதை வைத்து
பாக்குமனக் கண்ணாலே தன்னை பார்த்தால்
7ஆ பாதாதி கெசமுதல் பகுதி போலே
யெற்றமையுடன் காணுமடா சிவயோ கத்தால்
யெகாந்த தெரிசனத்தின் யாயவிபு கேளே
439

இயல்பான பூரணமே ஆதி வஸ்து
யாருதயமே தானான சோதி சோதி
செயமாக மூலமதின் வாசி யாலே
செம்மையுடன் ரசகற் பூரமும் பண்ணி
நயமாக கண்டமதில் அம்மைமன் றாணி
நாடியே அறுவமதி நடுவை பாரே

440

பாரப்பா நடுவான உச்சி மதில்
பத்திகொண்டு நயனமதனைப் பார்க்கும் போது
நேரப்பா சுரூபமென்ன சொல்வ னையா
நேர்மையுள்ள யேகரவளி படிகம் போலே
தேரப்பா தன்வசமாய்க் கண்ட போதே
தேகசந்தி உயர்வமாய் தெளிந்து கொண்டு
சாரப்பா சதாகாலம் அம்மைமன் றாணி
தன்மையுடன் தொடுகுறியைச் சார்வாய்க் காணே

441

கோணவென்றா லின்னமொடு கருமானங் கேளும்
கருணையுடன் திருவாசி காலமேற் கொண்டு
ஆணவே திரு.வா.சி. ~~சசி~~ தன்னால் மைந்தா
அத்தியுடன் ரசகற் பூரகுளம் பண்ணி
தோணவே தன்னறிவால் அம்மைமன் றேதான்
ஆ. சித்தமுடன் பூரணத்தில் நங்கை நின்று
பேணவே வாசியுள் நின்ற ஒளிபோலே
பேரண்ட தச்சிமுனைப் பேணிப் பாரே

442

பேணிப்பாத திருக்கையிலே நயனந் தன்னில்
பெருகின்ற சோதிதனை யென்ன சொல்வேன்
பூணப்பாய் மரகதம்போல் கண்டேனையா
பொருந்தி மனந்தறிவாலே கண்ட காட்சி
ஆணமாதந் திகமாய தேகந் தானும்
யப்போதே சித்தில்வெகு சித்தி யுண்டா
பாணப்பார்த் திரியாதே சிவயோகம் பார்
பரமகுரு மந்திரத்தின் சிற்று காரே
443

சித்தான தேகமெல்லாம் தன்னைக் காண
திருவான வாசிபதஞ் சிரமேல் கொண்டு
பத்தான - சித்தர்களை . . . . . தன்னைப் போற்றி
பாலகனே ரசகந் தூரமும் பண்ணி
சித்தான கண்டமதில் மங்கைன் ஞானி
தீர்க்கமுடன் சுழிமுனை நடுக்கமலந் தன்னில்
வைத்தாசை கொண்டுநிதம் பார்க்கும் போது
மாணிக்கம் போல்வெகு சோதி யாச்சே
444

சோதியென்ற மாணிக்கம் போலே யந்தச்
74அ. சுடரொளியாய் சத்தமுடன் கண்டா யானால்
ஆதியென்ற தேகமதை யென்ன சொல்வேன்
அப்பனே சுடரொளிபோல் அந்த மாகும்
நாதியென்ற நின்றனலே நினைவாய் நின்று
நித்தியமுஞ் சுத்தமதாய்ப் பார்த்தா யானால்
ஊதியென்ற ஆதார மாறா தாரம்
ஊழ்க்கொள்ள போலநின்றதெல்லாம் ? தன்னைப் பத்து
445

பந்தமட னியாகுந்து தன்னைக் காணப்
பதிவாக சுழிமுனையில் மனதை நாட்டி
சித்தமுடன் ரசகந் தூரகமும் பண்ணி
சிமிக்கையவே கண்டமதில் தீரகமே செய்து
பத்தியுடன் பூரணமாய் நின்ற அந்த
புருவமைய முக்கண்ணை நன்றாய்ப் பார்த்து
சுத்தமுள்ள சுடரொளி தான்பசுமை யாக
தோணுமடா கமலமதில் நுழைவார் பாரே

446

நடுவாக நின்றுஅடி முடிமேல்ப் பார்க்க
நமலபதந் தோணுமடா நயனக் கண்ணில்
நடுவாக நாமஞந்தேளம் நிதான பாரு
நந்திகொளு வாளதிரு நயன பீடம்
நடுவான பீடமதை நாடி பார்க்க
நானான காலறிந்து நடுமேல் னின்று
ஆ. நடுவான முக்கோணங் கீழ்மேல் பாரு
~~நாதர - - - - - - தானே~~

447

நானான தன்மையமே மாயா ரூபந்
தன்ரூபந் தான்றில் தன்னைப் பார்த்துக்
கோனான யருநேயமே குடியாய் நின்று
குருவான ஆதார சூலத் தேகத்
தேனான அமிர்தரச பானஞ் கொண்டு
தீர்க்கமுடன் கண்டமதில் வஞ்சென் றானி
வானான அண்டமடா மதன பீடம்
மதனாமைந்த சுழிமுனையாகவ மனதை நாட்டட

448

நாட்டமுடன் பூரணமாம் சோதியென் றெண்ணி
நந்தி சொரூபமான அருளாம் மீதில்
தேட்டமுட னியருந்து னமைந்தா னமைந்தா
திருவான நடனசபைக் கொலுவைப் பார்த்தால்
கூட்டமென்ற கூட்டமெல்லாந் தானாய்க் காணும்
குருவான தீபமதின் சோதி யாலே
ஆட்டமென்ற திருநடனச் சோதி யாலே
ஆதியந்த மானதுவுஞ் சோதி தானே 449

சோதியென்ற அருவமடா லாட மீதில்
சுடரொளியா நின்றதொரு சோதி தன்னை
நீதியுடன் வாசியினா லண்டம் மேவ
75.அ நீமகனே கண்டுநிதங் கொண்டா யானால்
ஆதியாலே அனைத்தவாதி யெருத்துவங் காணும்
அருளான்ந்த பதமது வெளி யாகும்
ஓதியதோர் மந்திரகலை வாசி யாகும்
ஊமையென்ற பூரணமே மகுதா நேரே 450

ரசமணி

நேரான குளிகையொன்று சொல்லக் கேளு
நிசமான வாதரசந் தன்னை வாங்கி
கூரானக் கன்னிதிரு மஞ்ச நீரை
கூர்மையுடன் அயக்கரண்டி தன்னில் விட்டு
பேரான ஜாந்தரசஞ் கலந்து சேர்த்துப்
பெருநின்ற அனல்தனிலே வைக்கும் போது
ஊறான கிண்டகுடை நீதானுங் கண்டால்
வேதாந்த ஜாந்தரசம் வாலை யாச்சே 451

வாலையென்ற சிவவாலை ஆர்தான் காண்பார்
வணக்கமுடன் கண்டுமன மகிழ்ந்து கொண்டு
வாலையென்ற சத்தியடா தங்க மாது
~~மகத்தான~~ . . . . மாது
வாலையென்ற மஞ்சையடா தங்க நாதம்
மகத்தான தங்கமவ னீதங் தன்னை
வாலையென்ற சிவி வாலை தன்னோடை . . . .
- - - - . . . . சேரு
452

ஆ. சேரடா சிவவாலை சத்தி வாலை
செம்மையுடன் ரெண்டு - - - - - - -
. . . - - - - . . .
செம்மையுடன் சேர்க்கவது திரண்டு போகும்
சேரடா குளிகைதனை நாத ஊர்த்து
திரண்டுண்டு . . . . யாக்கு
சேரடா குளிகைதன்னை கையால் வாங்கி
தீர்க்கமுடன் தமரமதிலே நிறுத்தியே வாயே
453

திறமாகத் - - . . . . - - - . பண்ணி
தீர்க்கமுடன் மண்யதுவுக்கு செம்மை யாக
உறமான நாதமதில் இளைப்பால் கட்டி
உண்மையுள்ள மனிதனுக்கு - - - - . . பண்ணி
பரமான சாரயந்த தன்னாற் போட்டு
பத்தியுடன் தன்னுதிரம் பாங்காய் பூட்டி
நாமான சுத்தாள உதரமே . . . ட்டி
சாஞ்சையுடன் மத்தகுச்சார் தன்னாற் போடு
454

போட்டவுடன் ரசகுளிகை யாகுகி நுன்னப்
பூரணமாய் கெவுனரசக் குளிகை யாகும்
நாட்டமுடன் குளிகைத்தனை கையால் வாங்கி
நாதாந்த சற்குருவைத் தியானம் பண்ணி
நேட்டமுடன் சிவயோகத் திருக்கும் போது
சிவசிவா நாவுதனிலே அடக்கம் செய்து

(76வது இலை காணவில்லை)

காணவில்லை

---

77. நேரப்பா அம்மைகுளிகை பதனம் பண்ணி
நேர்மையுடன் யின்னமொரு கருவைக் கேளு
சாரப்பா நாகமுடன் ரசமுங் கூட்டிக்
கருணையுடன் கல்வமதில் பொடித்துக் கொள்ளே 461

பொடித்த பொடிதனை . . . . தாரம்
பொல்லாத வீரமுடன் நாவல் கூட்டி
கருத்ததொரு நாதநீர் தன்னா லாட்டிக்
கருணைபெற ஆட்டியதை வட்டு பண்ணி
தரு . . . த்து மகெரவாதனை லேகாயம் போட்டு
சுருக்கமுடன் மண்சீலை சுத்திக் கட்டி
அருந்துபசைத் திறமறிந்துப் அடைத்தைப் போடு
அப்பனே நாஸ்சரக்கில் கட்டுந் தானே 462

நால்சாரக்குவேதை

கட்டுநின்ற சரக்குதனை யெடுத்து மைந்தா
கனகமென்ற தங்கமது உருகும் போது
திட்டமுடன் தக்குனிகா காலுக்கு தன்னைச்
சேர்த்துருக்க தங்கமது குருவாய் நிற்கும்
இட்டமுடன் சற்குருவைத் தொழுது மைந்தா
இன்பமுடன் செம்பதனை அருக்கிக் கொண்டு
சட்டமுட என்பதுக்கு யொன்று போட
தங்காமென்ற தங்கமடா செம்பு தானே 463

ஆ. செம்பைவாட்டு வெள்ளிதனை யுருக்கி மைந்தா
திறகமுள்ள குருவைத்து வைத்துக் கொண்டு
அன்புவைத்து தானுருக்கி யெடுத்துப் பாரு
அரத்தில் தங்கமய தென்ன சொல்வேன்
நம்பமல்ல குருமையினால் வெள்ளி செம்பு
நட்டமுடன் யெட்டுமொன்றும் பத்தாய் சேர்த்து
தூன்பமது தானகற்க் குறவால் மைந்தா
சுருக்கமுடன் அன்பதுக்கு ஒன்று போட்ட 464

ஒன்றாகத் தானுருக்கிப் பார்க்கும் போது
உத்தமனே பட்டிலாறு மாற்றுத் தங்கம்
நன்றாக தானுமடா நயனந் தன்னில்
நட்டமுட நிவவேதை நயந்து பார்த்து
நின்றாகும் வாதநிலை தனைய றிந்து
நேமமுடன் சிவயோக வாழ்க்கை தன்னை
அண்டமாரான குளதனால் வடி . த் . . தாக்கால்
அக்னகநிலை தங்காது அதி பாரு 465

தாரக்கட்டு

ஆதியென்ற அரிதார வேதை சொல்வேன்
அருளான காயத்தை யறிந்து பார்த்து
நீதியென்ற ஆதார மாரர தாரம்
நிலைத்துநின்ற மூலமடா மேலா தாரஞ்
சோதியென்ற நிராதார தார மான
சுகமான ஆதாரக் கட்டி வாஞ்சி
ஓதியதோர் மந்திரகலை வாசி யாலே
உத்தமனே கட்டுவகை அன்மை கேளே 466

உண்மையென்ற கண்டாலவன் கண்டா கட்டி
உத்தமனே வெடசூர மொன்றாய் சேர்த்து
நன்மையுள்ள நன்மையடா நாத நீரால்
நட்டமுடன் தானரைத்து நன்மை யான
தன்மையுள்ள தாரமதுக் கஞ்சி கூட்டி
சார்வாக மண்சீலை சாத்தி மைந்தா
சின்மயத்தின் னுள்ளாலே நிதானங் கொண்டு
தானங்கண்டு சிவசிவாபுடம் போடக்கட்டும் பாரே 467

பாரான பாரதியாந் தாரந் தானும்
பக்குவமாய்க் கமலமது திட்ட மாச்சு
நேரான தங்கமது மாண்டு போச்சு
நிசமான செம்பவளச் சோதி யாச்சு
பேரான சோதிதனைக் கண்ட போதே
பொற்றலாம் வாசிசிவ யோக மாச்சு
உரான ஆதாரஞ் காணா லாச்சு
உறுதியுடன் னுன்கண்டு வெளிச்ச மாமே 468

வெளிச்சமென்ற நிலைதனிலே குவிந்துப் பாருதேன்
மெஞ்ஞான தீபமதை மெய்யாய்க் கொண்டு
தெளிச்சயுட நாதாள் னிலையால் நின்று
சிவசத்தி மூலமதைச் செஹாத் தென்போ
பளிச்சென்வே அருவநடு வாட மீதில்
பரமகயாள சாரமெகு தோணுங் காந்த
சாளுக்சி நடுக்க மலந் தன்னில்
தோணுமடா மெஞ்ஞான சோதி தானே
469

லிங்கக்கட்டு

தானான சோதியைப் போலகட்டாய நின்ற
தன்மையுள்ள லிங்கமதில் தருசி கட்டி
உள்ளான சத்தியுடன் சேர்த்து மைந்தா
உறுதியுள்ள வீரமது யொன்றாய்க் கட்டித்
தெளான நாதமதால் நன்றாய் யாட்டி
திற்கமுடன் வளித்துகட்டி சிலை செய்து
கோளான குருபதத்தை நன்றாய்ப் போற்றி
கூர்மையுடன் ஆப்படத்தில் வைத்துப் பாரே
470

பார்க்கையிலே சரக்கெல்லா மொன்றாய்க் கட்டி
பக்குவமாய்த் தானிருக்கும் மைந்தா கேளு
யெந்தையுடன் தானெடுத்து வெள்ளி செம்பால்
இன்பமுடன் நாற்பதுக்கு வொன்று தாக்கி
மார்க்கமுடன் பார்க்கவே தான் வயதெட் டாகும்
வரிசையுடன் தானெடுத்து லிங்கஞ் சேர்த்து
தீர்க்கமுடன் அடம்போட்டு யெடுத்துப் சார்த்தாச்
சிவகலை பதினாறு செப்பமை தானே 471

வெள்ளைபற்பம்

79.அ செம்மையுடன் சிவகலை கண்ட போதே
சிவசிவா சிவயோகத் திறமை தாச்சு
அண்மையுடன் சிவயோகத் திறம தாலே
உத்தமனே நாடுமுன்னே தீபஞ் காணும்
தன்மையுடன் தீபமது தானே கண்டார்
தங்கமய மாகுமடா அங்கந் தானுந்
சின்மயமாய் நின்றதொரு அங்கந் தன்னை
சிவரூபமாக வேதான பூசை பண்ணே
472

பண்ணப்பா பூசைவிதி நன்றாய்ச் செய்து
பக்குவமாய் சற்குருவைத் தியானம் பண்ணி
அண்ணப்பா தானோக்கி கோர சார
அஞ்சையுள்ள மூலமதை ஆர்தான் காண்பார்
நண்ணப்பா தன்மயமாய் நாட்ட கொண்டு
நாதாந்த சக்திசிவ பூசை பண்ணி
கண்ணப்பா தான்துலங்க உன்னைப் பார்த்தார்
கற்பூர தீபமதை காண லாமே
473

காணவே யன்னமாறு கருமானஞ் சேரு
கருவான குளிப்பானை தன்னை வாங்கி
தோணவே யடைத்துநன்றாய் தோண்டிக் கொண்டு
சுகமாக வெள்ளியத் தகட்டில் தன்னில்
பூணவே தான்வெதிர்ந்து அடத்தைப் போடப்
ஆ. பசுமையுடன் எரியது பற்ப மாகும்
உண்மையே பரிபமதை பதனம் பண்ணி
உத்தமனே யன்னமாகு கருவைக் கேளு
474

நாகக்கட்டு

கருவான வெள்ளைய சற்பத் தொடை
காரமுடன் காரமது கருவாய்க் கூட்டி
திருவான வாய்நீரால் கலிவத் தாட்டிச்
செம்மையுடன் நாகமதுக் கவசஞ் செய்து
கருவான கவசத்தைக் காயப் பண்ணி
உத்தமனே நிதானமதாய்ப் புடத்தைப் போட்டு
குருவான நாகமது அருசி நல்ல
குணமாக நீரடங்கித் கட்டும் பாரே 475

கட்டான நாகமதை யெடுத்து மைந்தா
கருவான தங்கமது நாலுக் கொன்று
பட்டாகத் தான் கருத்து உருக்கிப் பாரு
மகத்தான தங்கமது குருவாய்ப் போகும்
சுட்டான தங்கமது குருவாய்ப் போனால்
சுகுசாதி யாகும்வகை தன்னைக் கேளு
கேட்டான் செம்புவெள்ளி யெட்டு ரெண்டில்
திறமான நாககுரு வொன்று போடே 476

போட்டுருக்கித் தானெடுத்து பார்க்கும் போதில்
பொற்கமல மாதுவய தெட்டு மாகும்
தெட்டுடைய சிவயோக மானதை கண்டால்
சிவதவத்துக் குருதியென செப்ப லாகும்
மூட்டுடைய திறவுகோல் கன்னக் கோல்தான்
மேஅ அத்தியுடன் ராசியோனெ லண்ட மேவு
ஆட்டுடைய திருநடனங் கண்டா யானால்
லப்பவல்லோ ஞானபதி மாகுந் தானே 477

சவுக்காரம்

